வேண்டும் என்று கருதினேன். உள்ளபடியே நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொல்லுகின்றபோது கூறியதுபோல, கோபம் மனிதனுக்கு இயற்கையாக வரும் என்றாலும், நான் உள்ளபடியே கோபக்காரன்தான். இப்போது என்னுடைய மனைவியிடத்திலேகூட கோபம் காட்ட முடியாத வாறு கூர் மழுங்கிவிட்டது என்று சொல்ல வேண்டிய நிலைமையிலேதான் நான் இருக்கிறேன். இந்த அவையிலே நீங்கள் எல்லாம் என்னோடு ஐந்தாண்டுகள் ஒத்துழைத்திருக்கிறீர்கள். நான் கோபித்துக் கொண்ட போதுகூட என்னுடைய வயதை எண்ணி நம்மிலே வயதுக்கு மூத்தவன், அண்ணன் சொன்னால் கோபித்துக் கொள்வோமா, நம்முடைய தந்தை சொன்னால் கோபித்துக் கொள்வோமா என்ற அளவிலேதான், நான் கோபித்துக் கொள்கின்ற நேரத்திலே எல்லாம் சிரித்துக் கொண்டு, அதற்கு என்னைத் தாக்காமலும், என்னுடைய தாக்குதலிலேயிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று கருதாமலும் இருந்திருக்கி றீர்கள்.

ஒரு மனிதன் உள்ளபடியே இங்கே மூன்று மணிநேரம் உட்கார்ந்து கொண்டிருப்பது என்பது கொஞ்சம் கடுமையான தண்டனைதான். அது இந்த இடத்தைக் காலியாக விட்டுப் போக முடியாத காரணத்தினால்தான். நான் இல்லை என்றால் துணைத் தலைவர், துணைத் தலைவர் இல்லையானால் மற்றும் நான்கு பேர் இருக்கிறார்கள். சில நேரங்களில் இந்த 4 பேர் களில் ஒருவரும் இருப்பதில்லை. துணைத் தலைவரும் இருப்பதில்லை. அம்போ என்று நானே 7 மணி வரையிலும் உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன். இருந்தாலும் நமக்கு ஒரு கடமை இருக்கிறது என்ற காரணத்தினாலே அந்தக் கஷ்டங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டிருக் கிறேன். இந்த ஐந்தாண்டுகளும் என்னை உங்கள் பெருமைக்குரியவனாக ஏற்று, உங்களில் மூத்தவனாக ஏற்று, நடந்துகொண்டிருக்கிறீர்கள். நான், எந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும் தலைவன் என்ற முறையில் அந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று கொஞ்சமும் காட்டிக்கொள்ளாமல் இந்த அவையை நடத்தியிருக்கிறேன் என்று என்னைப் பெருமைப்படுத்தி இருப்பதற்கு என் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (3) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 1975–76ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள் :—

1. திரு. கே. எஸ். அப்துல் வஹாப்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.
3. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி.
4. திரு. ஜி. சுவாமிநாதன்.

1975 எப்ரல் 11] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

5. திரு. எல். பலராமன்.

6. திரு. பி. ஆர். தாமஸ்.

7. திரு. ஏ. ஆர். தாமோதரன்.

8. திரு. ஜார்ஜ் கோமகன்.

9. திரு. சி. ரஸ்ஸல் ராஜ்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன். மேலவை விதி 156 (1)-ன் படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர், இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற மேலவை விதிகளின் 156 (4) விதியின் கீழ் திரு. கே. ராஜாராம் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்:

## (4) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 1975–76 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர் பதவிகளுக்குக் கீழ்க் கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1. திரு. எஸ். இராமகிருஷ்ண தேவர்.

2. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி.

3. திரு. கே. எஸ். கணபதி.

4. திரு. எம். கே. டி. நடராசன்.

5. செல்வி தமிழரசி.

6. திரு. எச். எல். முருகேசன்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது, ஆறு நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக்குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மேலவை விதி 173 (1)-ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS